உ

எல்லாம் தெய்வச்செயல்.

'நவமணி'

பெற்ற தாயும் பிறந்தபொன் ஞடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே. [பாரதியார்]

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்ரு ரனைத்திலர் பாடு. [திருவள்ளுவர்]

மாலை 1. } பள்ளத்தூர். பிரமோதூத வைகாசி. { மணி 5.

அச்சுச்சட்டம்.

இந்திய சுதந்திரப்போர் துவங்கிய பின்னர் நமது காருண்ணிய கவர்ன்மெண்டார் நமக்களித்த அடக்குமுறையின் பலனுகப் புதிதாகத் தற்பொழுதைய இந்திய கவர்னர் ஜெனரலான லார்டு இர்வின் புரபுவின் மூலம் தோற்றுவிக்கப்பட்ட ஐந்து புதிய பெரிய அவசரச் சட்டங்களுள் ஒன்று அச்சுச் சட்டம் என்பதை தினசரி சமாசாரப் பத்திரிகை படிப்போரும் உலகியல் விசாரணை பெற்றுள்ளோரும் நன்கறிவர். முன்னேர் ஆண்டிலே ஏற்பட்ட இதே போன்றல்லாமல் இன்னும் கொஞ்சம் தாராள நோக்கங் கொண்ட அச்சுச் சட்டமானது நமது கவர்ன்மெண்டாரால் நமக்கு வழங்கப்பட்டபொழுது அதனுல் அச்சுக்கூடங்களுக்கும் பத்திரிகைகளுக்கும் ஏற்பட்ட அளவற்ற துன்பங்களை முன்னமே அறிந்த இந்தியத் தலைவர்கள் ஓயாது போராடி சிறிது காலத்திற்கு முன்னரே அந்த எமனைத் தொலைத்தார்கள். அதை இப்பொழுது இன்னுங் கொஞ்சம் விரிவுபடுத்தி இர்வின் பிரபு நமக்

களித்துள்ளார்கள். இதனால் இந்தியாவிலுள்ள அச்சுக்கூடங்களும் அதன் தொழிலாளர், சொந்தக்காரர்களும் பத்திரிகைத் தொழிலிலீடுபட்டுள்ளோரும் பத்திரிகைகளும் இச்சட்டம் ஏற்பட்ட இவ்விரண்டு மாதங்களுக்குள் அடைந்துள்ள துன்பங்களுக்கு அளவேயில்லை. இக்கொடிய சட்டத்தைக் கண்டிக்காத இந்தியர் எவருமில்லை என்றே சொல்லலாம். இதை வெளி நாட்டிலுள்ள இந்தியர்களும் இந்தியர் நண்பர்களுங்கூடக் கண்டித்துள்ளார்கள். இந்தியாவிலுள்ள அகில இந்திய அச்சுகூடங்களின் சொந்தக்காரர், தொழிலாளர், பத்திரிகாசிரியர்கள், பத்திரிகைத் தொழிலிலீடுபட்டுள்ள ஏனையோர் அச்சுகூடச் சாமான்களை உதவுவோர் முதலியவர்களின் மகாநாடொன்று பம்பாயில் சென்னை 'ஹிந்து' பத்திராதிபர் உயர்திரு. அரெங்கசாமி ஐயங்காரவர்கள் தலைமையில்கூடி ஏகமனதாகக் கண்டனத் தீர்மானமொன்று செய்ததுமல்லாமல் குறிப்பிட்ட இரண்டு நாளை பத்திரிகாலயங்கள், அச்சுக்கூடங்கள் வேலைநிறுத்த தினங்களாக இந்தியாவெங்கும் அதைக் கண்டிப்பதற்கறியாகப் பாவிக்க வேண்டுமென்றும் அத்தினங்கள் அச்சுக்கூடங்கள் அச்சிடாமலும் பத்திரிகைகள் வெளிவராமலும் இருக்கவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். அதன்படியே இந்தியாவெங்கும் கொண்டாடப்பெற்றதுடன் நாட்டின் ஒவ்வோர் பாகத்திலும் பொதுக்கூடங்கள் கூடி அச்சட்டத்தைக் கண்டித்துத் தீர்மானங்களும் செய்யப்பட்டன.

மற்றொருபுறம் தேசிய மகாசபையார் தற்பொழுதைய தலைவரான பண்டித மோதிலால்ஜீயின் தலைமையில்கூடி இச்சட்டத்தைக் கண்டிப்பதற்கறிகுறியாக எல்லா தேசியப் பத்திரிகைகளும் வெளியிடுவதை நிறுத்திவிட வேண்டுமென்று கண்டிப்பான தீர்மானத்தை நிறைவேற்றி வைத்தார்கள். அதற்குக் கீழ்ப்படிந்து அநேகம் பத்திரிகைகள் தங்கள் வெளியீட்டை நிறுத்திக்கொண்டுவிட்டு அப்பத்திரிகைக்காரர்களின் பிரதிநிதிகளை சென்ற காரியக்கமிட்டிக் கூட்டத்தின்போது அனுப்பி வாதாடியதின்மூலம் அப்போதைய தீர்மானத்தை மாற்றி தேசிய மகாசபையைத் தழுவி அடக்குமுறையைக் கண்டித்து தைரியத்துடன் வெளிவர இஷ்டமுள்ள பத்திரிகைகள்மட்டும் வெளிவரலாமென்ற தீர்மானம் இப்பொழுது அமுலில் இருந்துவரும்படி சென்ற சில தினங்கள் முன் செய்யப்பட்டது.

வேறோர்புறம் இந்திய கவர்ன்மெண்டாரின் அச்சுச்சட்டத்தின்படி மாகாண கவர்ன்மெண்டுகள் நூற்றைம்பதிற்குமேற்பட்ட பத்திரிகைகளுக்கும் அச்சுக்கூடங்களுக்கும் சக்திமீறிய ஜாமீனைக் கேட்கவே அதனால் தாங்கமுடியாமலும் அதைக்கட்ட இஷ்டப்படாமலும் நின்றுவிட்டன. இத்தனைவிதமான சங்கடங்களுள்ளே என்று நமக்கு ஆபத்துவருமோ என்று அஞ்சி எதிர் பார்த்துக்கொண்டே வெளிவரும் சில பத்திரிகைகளும் தொழிலை நடத்தும் சில அச்சுக்கூடங்களும் எண்ணைக் கஷ்டங்களுக்காளாகித் தன் காரியங்களைக் கவனித்துக்கொண்டிருக்கின்றன.

இத்தனை சிரமங்களுக்குங் காரணம் நம் இந்தியநாடு தமது உரிமையைக் கேட்பதேயாகும். ஓர் நாடு மற்றொரு நாட்டிற்கு அடிமையாய் வாழ இஷ்டப்படுந்தோறும் அதற்குப் பல்வேறு நற்சாக்ஷி பத்திரங்களும் ஸ்தோத்திரப் பதைக்கங்களும் பரிசளிக்கப்படும். தனது நிலைமையறிந்து உரிமையைக் கேட்டால் அது இந்த நிலையில் துன்புறுத்தப்படும். எனவே அடிமையாயுள்ள ஒவ்வோர்வரும் இதைப் பாடமாகக் கொண்டு உலக சுதந்தரத்தை நாடுங்கள் என்பதைக் காட்டுவான் போல நிற்கின்றது நமது இந்திய நாடு.

இச்சுதந்தரக் கிளர்ச்சியை நேரடியாக அடக்கவேண்டுமானல் நமது காருண்ணிய கவர்ன்மெண்டார் ஒருவரும் வாயால் இந்தியாவிற்கு சுதந்தரம், விடுதலை, இந்தியா உரிமை என்ற பேச்சே பேசக்கூடாதென ஓர் வாய்ப்பூட்டு அவசரச் சட்டம் பிறப்பித்து அதை மீறிப் பேசுபவர்களுக்கு ஆயுள்பரியந்தம் தண்டனை என்ற விதியையும் நிர்ணயித்துவிட்டால் உடனே சுதந்தரப் பேச்சு நின்றுவிடும். ஆனல், மானசீகமான கிளர்ச்சியும் எண்ணமும், இந்தியர் மனதில்தான் நிற்கும். வெளிவராது. அதை விடுத்து பத்திரிகை அச்சுக்கூடங்களுக்குமட்டும் ஓர் சட்டத்தின்மூலம் சமாசாரம் பரப்பக் கூடாதென்று சொல்வதால்மட்டும் சுதந்தரக் கிளர்ச்சி அடங்கிவிடுமென்று எண்ணுவது பகர்க் கனவாகவேமுடியும். அதல்லாமல் இந்தியாவிலுள்ள அச்சுக்கூடங்கள்யாவும் பூட்டப்பட்டும் பத்திரிகைகள் யாவும் நிறுத்தப்பட்டும் போனபோதிலும் இந்தியரின் நியாயக் கோரிகையான குடியேற்ற நாட்டாந்தஸ்தை யேனும்

வழங்காமல் அதைங்பற்றி எழுதும் பத்திரிகைகளையும் வெளியிடும் அச்சுக்கூடங்களையும் மூட அச்சுச்சட்டம் போன்ற எத்தனை பெரிய சட்டங்களேற்படினும் பிரயோஜனமில்லை. இவைகள் நின்றுபோயின் சுதந்தரதாகங்கொண்ட இந்திய வீரர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து சதா இதே பேச்சாகவேயிருந்து பத்திரிகைள் மூலம் இந்தியாவிற்கு சுதந்தரச் சமாசாரம் தெரிவதைவிட வேகமாகவும் விரிவாகவும் இந்தியமக்கள் விஷயமறியும்படி செய்து விடுவார்கள்.

கிளர்ச்சியை யொடுக்கி இந்தியரை சமாதானப்படுத்தவேண்டுமென்ற அவா நமது காருண்ய கவர்ன்மெண்டாருக்கும் இந்திய ராஜப்பிரதிநிதியான லார்டு இர்வின் பிரபுவிற்கும் இருக்குமானல் சீக்கிரத்தில் இந்தியருக்கு குடியேற்றநாட்டந்தஸ்து வழங்கப்படும், தற்பொழுது லண்டனில் நடைபெறவிருக்கும் இந்திய சர்வகக்ஷி மகாநாட்டில் இதையே பேசப்படும், என அறிவித்து அரசியல்கிளர்ச்சியில் பெரும் பேறு பெற்றுள்ளதான இந்திய தேசிய சபையாருக்கு அதிகமான ஸ்தானங்கள் சவர்கக்ஷி மகாநாட்டில் கொடுத்து சமரசமான முடி வைக்காண நம் காந்திஜீயுடன் ஓர் முடிவு பேசி சமரசத்தை யுண்டுபண்ண வேண்டுமேயொழிய இத்தியாதி அச்சுச்சட்டம் போன்றஅவசரச் சட்டங்களைப் பிறப்பிப்பதன்மூலம் இக்கிளர்ச்சிக்கு விரோதிகபாயும் நமது கவர்ன்மெண்டாருக்கு ஆப்தர்களாயும் விளங்கியமா பெரும் அன்பர்களையும் இழந்துவருகிற ஒரு பலனைத் தவிரவேறொன்றும் எதிர்பார்க்க முடியாது.

கிளர்ச்சியை யொடுக்குவதற்கு அதற்குக் காரணமான ஆணிவேரைக் கண்டு அதை எடுக்கவேண்டும். அதல்லாமல் இலைகளை வெட்டுவதால் அச்சுதந்தர மரம் பட்டுப்போகாது. அச்சுதந்தர மரத்திற்கு அடிமையென்னும் ஆணிவேர் நன்றாகவேருன்றி ஆழப் பாய்ந்திருந்ததை இந்தியர் வீரமென்னும் விஷத் தண்ணீர் ஊற்றிக் கொன்று சுதந்தரமென்னும் வீர அமிர்தப்பிரவாகத்தால் பூரண விடுதலை என்ற விருக்ஷத்தை நன்றாக வித்தி விட்டார்கள். அதை வளர்ப்பதற்காக ஒவ்வோர்வரும் தமது உயிரைக் காவலாகவும் இரத்தத்தைத் தண்ணீராகவும் வார்த்து வருகிறார்கள். இதனால் அம்மரம் தழைத்துப் பெருத்துக் கொழுத்துப் பூ, பிஞ்சு,

கனியுடன் இன்று நம் நாட்டில் நிற்கிறது. அதை எவராலும் இத்தியாதி எந்த சட்டங்களாலும் கொல்லமுடியாது. இன்னும் வீறிட்டுப் பெருக்காமல் அதைச் செய்யவேண்டுவதுதான் புத்திசாலித்தனம். அதற்கு அதை வளர்ப்பவரோடு சமாதானஞ்செய்து இரத்தத்தை யூற்றி வீரமாக கோரரூபத்துடன் வளர்க்காமல் சமாதான முறையில் வளர்க்கச் செய்யவேண்டும். அது சமரசத்தால்தான் முடியும். எதற்கும் சமரசவழியில் பெரும்பலனடையலாம். அடக்கு முறையால் முறண்தான் முற்றுமேயல்லாமல் நியாயம் நிலைக்காது.

எனவே, நமது காருண்ய கவர்ன்மெண்டாரும் இந்திய ராஜப்பிரதிநிதியான இர்வின் பிரபுவும் இந்தியரின் சுதந்தரக் கோரிக்கையில் கொஞ்சம் தாராள மனதுடன் சமரசமாகப் போவார்களேயானல் மிகுந்த வெற்றியும் உண்டாகி இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்கும் அளவற்ற உயர்ந்த ஒற்றுமைக்கு விதைபோட முடியும் இத்தியாதி அச்சுச்சட்டம் போன்ற அவசரச் சட்டங்களை இந்தியா முன் நிறைவேற்றி அநுஷ்டானத்தில் கொண்வேந்து கிளர்ச்சியை அதிகப்படுத்தி நிலைமையை சமாளிக்கமுடியாத துறையில் வைத்துவிடாமல் உடனே சமாதானத்திற்கு இரு கொள்கையாளர்களும் ஏற்பாடுசெய்து நாட்டை சாந்தியுடன் சுதந்தரநாடாக்க வேண்டுகிறோம். அதுதான் நலமும் மேன்மையுமாகும்.

இனும்! இனும்!!

ஒரே தடவையில் 6-நவமணி சந்தா சேர்த்து ஆறு ரூபாய் மணியார்டரில் அனுப்புவோர்க்கு ஒரு வருட நவமணியோ அல்லது ஒரு ரூபாய் ரொக்கமோ இனுமாகக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
"நவமணி" பத்திரிகாலயம்.
பள்ளத்தூர் (ராமனாதபுரம் ஜில்லா.)

மணியொலி.

இராசீயக் கைதிகள்.

சுதந்தரப் போரில் கலந்துகொண்டு சிறைக்கோட்டம் நண்ணியுள்ள இராசீயக் கைதிகளின் குறைகள் எங்கணும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அவர்கள் யாவரும் தங்கள் சொந்தநலன் நாடியோ வேறு துன்மார்க்கங்களில் இறங்கியோ குற்றஞ் செய்ததாகத் தண்டிக்கப்பட்டவர்களில்லை. அதில் பல பெரிய பணக்காரர்களும் அறிவாளிகளும் அடங்கியிருக்கிறார்களென்பதை நன்கு அறிந்தும் ஜெயில் அதிகாரிகள் அவர்களை நடத்துவதும் அவர்களுக்கு ஆகாராதிகள் கொடுப்பதும் உடை, ஸ்நான வசதிகளும் கொஞ்சமும் திருப்தியாகவில்லை என்ற செய்தி நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதை யொட்டி பல்வேறு இடங்களில் உண்ணாவிரதத்தையும் இராசியக் கைதிகளாயுள்ளவர்கள் அனுஷ்டித்துத் தங்களது உயிரையுந் தியாகஞ் செய்யக்கூடிய நிலை ஏற்படுகிறது. நமது மாகாண சட்டமெம்பரை இது விஷயமாக இருமுறை சில அறிஞர்கள் பேட்டியும் கண்டார்கள். அதற்கவர் அது விஷயமாகக் கவனிப்பதாகப் பதிலளித்ததாகத் தெரிகிறது. இவ்விஷயத்தை ஆங்காங்குள்ளவர்கள் உடனே மேலதிகாரிகளுக்கு அறிவித்து அக்குறைகளை ஜெயில் அகாரிகளுடன் கலந்து உடனே நிவர்த்தி செய்ய வழிதேடுவார்களென எதிர்பார்க்கிறோம்.

பர்மா கலகம்.

பர்மாவின் தலைநகரான இரங்கோனில் கோரங்கி கூலிகளுக்கும் பர்மிய கூலிகளுக்கும் ஏற்பட்ட சிறு கலவரம் பெரிய ஓர் கலவரமாகி முன்னம் சிறிது நாளைக்குமுன் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பர்மாவை சிறிது சிரமப்படுத்திவிட்டது. இக்கலவரத்திற்கு மூலகாரணமொன்று நீண்டநாளாகவிருக்கும் விஷயம் யாவரும் அறியாததல்ல. பர்மாவை இந்தியாவினின்றும் பிரித்துவிடவேண்டுமென்ற எண்ணமுள்ளவர்களுக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்கும் இக்

கலவரம் ஓர் சாதகமாக முடிந்துள்ளதுபோலும். ஜனங்களின் அபிப்பிராயத்தை நன்ருகப் பரிசீலனை செய்து பார்த்தால் அது முற்றும் பொருந்தாத, ஜனங்களின் மிதமான ஆதரிப்பற்ற விஷயம். இக்கலகத்தில் இந்தியர்களுக்கு அதிகச் சேதம் ஏற்பட்டதும் இது விஷயத்தில் அதிகாரிகள் கொஞ்சம் அலக்ஷிய புத்தியுடனிருந்ததும் பெரிதும் வருந்தத்தக்கது. இதனல் ஆயிரக்கணக்கான கோரங்கிக் கூலிகள்கூட தாயகம் திரும்ப நேர்ந்ததென அறிகிறேம். இதை அதிகாரிகள் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தினர்களடங்கிய கமிட்டிகளைக்கொண்டுநன்குவிஜாரித்து அறிக்கை வெளியிட வேண்டுவதுடன் இத்தியாதி நிலைமை இனியும் ஏற்படாமலிருக்க வேண்டிய ஏற்பாடுகளை உடனே எடுத்துக்கொள்ள வேண்டுகிறேம்.

துப்பாக்கிப் பிரயோகங்கள்.

சட்டமறுப்புப் போர் சம்பந்தமாயும் ஊர்வலங்கள் சம்பந்தமாயும் இந்தியாவின் பல இடங்களிலும் துப்பாக்கிப்பிரயோகங்கள் தினேதினே அதிகரித்து வருகின்றன. மிரட்டலால் கலைக்க எண்ணும் அதிகாரிகள் சமயம் நேர்ந்தால், காலி வேட்டைப் போடலாம். இல்லையேல் அபாயகரமற்ற குண்டுகளைப் போட்டு வெடிக்கச் செய்யலாம். அதை விடுத்து இப்பொழுது ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகங்களால் பல உயிருக்குச் சேதம் வந்திருப்பதிலிருந்து இந்தியர்களைக் கொல்லவேண்டும். சிலர் சாவதை அறிந்தேனும் கோழைகள் இதில் கலக்காதிருக்க வேண்டுமென்ற கருத்துக் கொண்டே இப்புதிய வழி அனுஷ்டிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இது கண்ணியமுள்ள கவர்ன்மெண்டிற்கு ஏற்றவழியல்ல. அரசியல் தாகம் கொண்டுள்ள மக்களை இத்தியாதி வழிகளால் அடக்கமுடியாது. நிலைமையைத்தான் சமாளிக்கமுடியாததாகச் செய்துவிடும். கவர்ன்மெண்டார் இனியேனும் நிரபராதிகளான இந்தியர் மீது எவ்விடத்திலும் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்வதை நிறுத்துவார்களாவென எதிர்பாக்கிறேம்.

ஜனுப் தயாப்ஜீ—சரோஜினிதேவி.

மகாத்மாஜீ சிறை சென்றதும் அவ்வியக்கத்தை முன்னிலும் சிறப்புடன் நடத்த வெளிவந்த கிழச் சிங்கமான ஜனுப் அப்பாஸ் டயாப்ஜீயும் சிறையிடப்பட்டார். பின்னர் அதற்கு நியமிக்கப்பட்ட

பாடும் பக்ஷியெனப் பெயர்வாய்ந்த ஸ்ரீமதி சரோஜினி தேவியும் நமது கவர்ன்மெண்டாரின் சிறிய சிறைக்குச் சென்றார்கள். இவர்கள் வீரமும் தேசாபிமானமும் பாராட்டுதற்குரியதான போதிலும் கவர்ன்மெண்டாரின் அடக்குமுறை காரணத்தால் இது சகஜமாக ஏற்படக்கூடியதே என்பதை யாவரும் முன்னரே எதிர்பாத்ததே யாகும்.

மிஸ்டர்ஸ்லோகோம்.

இந்திய விஷயங்கள் வெளிநாடுகளில் நன்றாகத் தெரியவில்லை என்ற காரணத்தால் பல வெளிநாட்டுப் பத்திரிகைகள் தங்கள் தங்கள் பிரதிநிதிகளை இந்தியாவிற்குப் அனுப்பியுள்ளன. அங்ஙனம் வந்துள்ளவர்களில் லண்டனில் வெளியாகும் பெரிய பத்திரிகைகளுள் ஒன்றான 'டெயிலி ஹெரால்டு' பத்திரிகையின் நிருபரான மிஸ்டர் ஸ்லோகோம் என்பவரும் ஒருவர். இவர் மிகுந்த கண்ணியமும் செல்வாக்கும் வாய்ந்தவர். பல சமாதானங்களில் தலையிட்டு அதன் பெருமையை ஏற்றவர். இவர் இந்தியாவிற்கு வந்தது முதல் மிகுந்த சுறுசுறுப்புடன் இந்தியத் தலைவர்களை எல்லாம் கண்டு உண்மையான இந்திய விஷயங்களை அறிந்து உள்ளதை உள்ளபடியே தமது பத்திரிகைக்குக் கொடுத்துவருகிறார். அதுவும் தொழிற்கக்ஷிப் பத்திரிகை என்றே தெரிகிறது. இவ்வுதவியை கண்ணியமுடன் செய்யும் மிஸ்டர் ஸ்லோகோம்மை நாம் பாராட்டுகிறோமானபோதிலும் இனியாகிலும் இந்தியரின் உண்மையான விஷயங்களை லண்டனில் உள்ளோர் அறிந்துகொள்ளப் பூரண வசதியுண்டா என்பது சந்தேகமே.

தேவை! தேவை!!

நமது நவமணிக்கு சந்தா சேர்க்க இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களிலும் முக்கியமாகத் தமிழ் நாட்டில் ஜில்லாதோறும் ஏஜண்டுகள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும். விவரத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
"நவமணி" பத்திரிகாலயம்.
பள்ளத்தூர் (ராமனாதபுரம் ஜில்லா.)

அகமகிழ்ச்சியும் — — முகமலர்ச்சியும்.

திரு. பி. ஸ்ரீ அவர்கள்.

இயற்கையோ டிசைந்த இன்பவாழ்க்கையே உண்மை—வாழ்க்கை நல்லின்பம் உயிரை வளர்க்கின்றது; உள்ளத்திற்கு அமுதமாகின்றது; உடம்பிற்கு ஆரோக்கியமாகின்றது. இத்தகைய இன்ப உணர்வு, மனமெய் மொழிகளிலும் ஊடுருவிக்கலந்து வாழ்க்கைக்கு இனிமை யளிப்பதாகும்.

இன்பவாழ்க்கைக்கு நகைச்சுவை இன்றியமையாததொன்று. ஒழுக்கத்திற்கு அடுத்தபடியாக இல்வாழ்க்கைக்கு இன்றிமையாதது நகைச்சுவையே என்று ஒரு பெரியார் கூறியுள்ளார். ஒரு மதக் கொள்கைக்கு எவ்வளவு மரியாதை கொடுத்தல் வேண்டுமோ, அவ்வளவு மரியாதை தூய்மைவாய்ந்த நகைச்சுவைக்கும் அளிக்கப்படல் வேண்டுமென்பது வேறொரு பெரியார்—கருத்து. ஏன்? உண்மையான நகைச்சுவை சூரிய—ஒளிபோல் தீதில் இன்பம் தருவதாகவும் சோக—இருள் மாய்ப்பதாகவும் அமைந்து தோல்வியிலும் வெற்றி காட்டி வாழ்க்கையை வளமுறச் செய்வதன்றோ? வானிடைக் காட்சிதரும் பரிதியின் பேரொளிபோல், எண்ணருந் துயர்விளையும் இம்மண்ணிடை வாழும் மக்களது திருமுகத்தில், நகையொளி சுடர்வீசி யெழுகின்றது. பரிதியொளி உலகிற்கு உயிர்தருகின்றது; நகையொளி வாழ்கைக்கு இனிமை தருகின்றது.

நகையொளி அகமகிழ்ச்சியாகவும் முகமலர்ச்சியாகவும் காண்கின்றது. இந் நகையொளி சாதாரண உணவிற்கும் அமிர்தத்தின் சுவையினை அளிக்கின்றது; சாதாரண முகத்திற்கும் தெய்விகப் பொலிவு தருகின்றது. கம்பன் தனது கதாநாயகனை,

"சிரித்த பங்கயம் ஒத்த செங்கண் இராமன்" என்று வருணிக்கின்றான். செந்தாமரையின் செவ்விவாய்ந்த திருக்கண்களில் சிரிப்பு அலையெறிகின்றது என்று வருணிக்கப்பெறும் கம்பராமன் மக்களுள்ளங்களை மகிழ்வித்து வசீகரிக்கும் தூய பேரழகனாக இலக்கிய உலகில் காட்சிதருகின்றானன்றோ?

இராமனுக்கு எங்கும் வெற்றி; எல்லாம் வெற்றி! "நீ மணி முடி புனைந்து தனியரசு புரிதல் வேண்டுமென்று தந்தையாகிய சக்ரவர்த்தி

கட்டளையிடும்போது, இராமன் சிங்காதனத்தின் மீது காதல் கொள்ள வில்லை யெனினும் அதனை இகழாது முகமலர்ச்சியோடு ஏற்றுக் கொள்ளுகிறான். உடனே நாடிழந்து காடு செல்லுதல் வேண்டும் என்று கைகேயி கட்டளை யிடும்போதும், அவனது உள்ளம் ஒரு சிறிதும் நிலைகுலையவில்லை; அகமகிழ்ச்சி ஒரு சிறிதும் குறைந்துபோகவில்லை. மும் மடங்கு பொலியும் முகமலர்ச்சியோடு, அப்பொழுது மலர்ந்த செந்தாமரையினை வென்ற வீரத் திரு முகத்தினைக் கைகேயியை நோக்கித்திருப்பிக்கொண்டு,

"மன்னவன் பணியன் றாகில்
    நும்பணி மறுப்பனோ? என்
பின்னவன் பெற்ற செல்வம்
    அடியனேன் பெற்றதன்றோ?
என்இனி உறுதி யப்பால்
    இப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கானம் இன்றே
    போகின்றேன், விடையும் கொண்டேன்."

என்று கம்பீரமாகக் கூறுகிறான். இது கவிச்சக்கரவர்த்தி நமக்குக் கற்பித்துத் தரும் இலட்சிய புருஷனாகிய இராமனது என்றும் அழியாத சித்திரமாகும். சரித்திர புருஷனாகிய உண்மை—இராமனைப்பற்றி நாம் ஒன்றும் அறியோம். கற்பனைக் காவியங்களில் உத்தமக் கவிகள் சிருஷ்டிக்கும் வீரராமனே நமது வாழ்க்கை—நெறியிலே ஒளிவீசும் உயர்தர—லட்சியமாகக் காண்கின்றான். உண்மையில், வான்மீக இராமன் வேறு; துளசி தாசரது இராமன் வேறு; கம்ப—இராமன் வேறு. இவ்வாறு தெய்வமாக்கவிஞரது. கற்பனை யுலகில் பலவேறு இராமர்கள் காட்சி தருகின்றார். இவர்களில் கம்ப—இராமன்,

"இடுக்கண் வருங்கால் நகுக!"

என்னும் தமிழர் பொதுமறைக்கு ஓர் இலக்கியமாகிறான்.

இடுக்கண் (துன்பம்) வரும்போது நகுதல் (அதாவது சிரித்தல்) வேண்டும் என்று திருவள்ளுவர் கூறுவது ஓரரிய மனநூலுண்மையாகும். 'இடுக்கண்'—இடுக்கண் துன்பம் வரும்போது கண்கள் இடுங்கி விடுகின்றன. அப்பொழுது சிரித்தால், இடுங்கிய கண்கள் மலர்ச்சி பெறுகின்றன. நீண்டு தொங்கும் முகமும் பரந்து மலர்கின்றது. சோகத்தால் கூம்பிக் குவிர்ந்து அகமும் மலர்ந்து மகிழ்வெய்துகின்றது.

கவலையும் துன்பமும் உள்ளத்தே கொண்டிருப்பவர்கள் நிலைக் கண்ணாடிக் கெதிரே நின்று—அல்லது முகக் கண்ணாடியை யெடுத்து அதன்முன்—தங்கள் முகத்தை உற்று நோக்குதல் வேண்டும். அப்பொழுது அவர்கள், அகத்துன்பம் முகத்தில் எவ்வாறு பிரதிபலிக்கிறதென்பதை ஒருவாறு உணர்ந்துகொள்வார்கள். அந்நிலையில் முகத்தைச் செம்மை செய்து கொண்டால் அகமும் செம்மையாகும் என்பது மனநூலார் அனுபவமுறையில் காட்டும் ஓர் அப்பியாசமாகும். நீண்ட நாளாக உடம்பிற்கு உள்ளம் அடிமையா யிருந்திருப்பதால், முகத்தில் செயற்கையான சிரிப்பை விளைத்துக் கொள்வது அகமகிழ்ச்சியை விளைவிப்பதற்கு ஒரு குறுக்குவழியாக அமைதல் கூடுமென்றே?

அகமகிழ்ச்சியும் முகமலர்ச்சியும் முள்ளவர்களே அரும் பெருஞ் செயல்களையும் எளிதில் செய்யவல்லவராவர். அவர்கள் அரும்பெருங்கலைகளையும் எளிதில் பயின்று நிபுணர்களாலுங் கூடும் 'அருங்கலை விநோதர்' என்னும் சொற்றொடரை நாம் நமது நினைவில் பதித்துக்கொள்ளுதல் நன்று. அரியகலைகளைப் பொழுது போக்காகக்கற்றல் கூடுமன்றே? தொன்னூற்கு அஞ்சித் தடுமாறும் நெஞ்சினர் பெரும் புலவராகத் திகழ்தல் எங்ஙனம்?

தான் மகிழ்ச்சியோடிருப்பவனே பிறருக்கும் மகிழ்ச்சி யளித்தல் கூடும். பிறருக்குப் பணியாற்ற விழைவோர் அகமகிழ்ச்சியினையும் முகமலர்ச்சியினையும் ஒரு மதமாகக் கொண்டொழுகுதல் வேண்டும். அத்தகைய தொண்டரது தூய உள்ளத்தில் பிறந்து திருமுகத்திலே பிரதிபலிக்கும் இள நகை, 'தெய்வக் களிதுலங்கும் நகை'யே யன்றே?

இவர்கள்என்றும்நன்மை;எல்லாம்நன்மை! கருதி என்றும் வாழ்வர், இவர்களுக்கு இடையூறு என்பதேயில்லை. பிறர் இடையூறு என்றும் இன்னல் என்றும் கூறுவதை இவர்கள் "மாறுவேடம் பூண்டுவரும் மகிழ்ச்சி" யென்றே மதிப்பர். தம்மைச்சூழ்ந்துள்ள இயற்கைப் பேரழகுகளையும் அவ்அழகுகளினிடையே திகழும் இதையருள்மாட்சியினையும் கண்டு, அவர்களது உள்ளம் குதிகொள்ளுகிறது; அவர்களது உயிர் 'மாரிலா மகிழ்ச்சி'யில் மலர்ச்சி பெறுகிறது.

ஆக்கல் அளித்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களையும் செய்யும் தலைவனுகிய இறைவன் அத்தொழில்களை விளையாட்டாகச் செய்தருள்கின்றான் என்பது ஆன்றோர்—கொள்கை. அவ்வண்ணமே பக்தமணிகளான தொண்டர்களும் இறையருளின் கருவியாகத் தம்மை

க்கருதி அரும் பெருங்காரியங்களை யெல்லாம் விளையாட்டாகச்—அநாயாசமாகச்—செய்து முடிப்பர்.

மகிழ்ச்சி இறையருள் போல்—சூரிய ஒளிபோல்—தூய்மைவாய்ந்தது; அழகுவாய்ந்தது; இனிமைவாய்ந்தது; இதயத்தில் இலங்கும் மகாபக்திக்குச் சான்றாவது. உண்மையான நல்லதிர்ஷ்டம் இம்மகிழ்ச்சியிலேதான் மறைந்து கிடக்கிறது. இவ் அதிர்ஷ்ட உணர்வே இம்மைக்கும் மறுமைக்கும் நம்பிக்கைதரும் நல்லுணர்வாகும்.

இச் சந்தர்ப்பத்தில் ஒரு கதை எனது நினைவிற்கு வருகிறது. தேவரிஷியாகிய நாரதர் சிவலோகம் சென்று கொண்டிருந்தார். அவர் தாம் செல்லும் வழியிலேயுள்ள ஒரு காட்டில் இரண்டு முனிவர்களைக் கண்ணுற்றார். அம்முனிவருள் ஒருவர் இறைவனை நோக்கிக் கடுந்தவம் புரிந்துகொண்டிருந்தார். மற்றவர் இறையருளை வியந்து பக்திப்பெருங் காதலோடு ஆடிப்பாடிக் கொண்டிருந்தார். இரண்டு முனிவர்களும் நாரதமகரிஷியைசெல்லுமிடம் தெரிந்துகொண்டு, "தேவரிஷியே! நாங்கள் எப்பொழுது முத்திபெறுவோம் என்று தேவதேவனாகிய சிவபெருமானிடம் தயவுசெய்து அறிந்துவருதல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். நாரதரும் சம்மதித்துத் தன் வழியே சென்றார். அவர் மீண்டு வருகையில், முனிவர்கள் ஆவலோடு தங்கள் கேள்விக்குக்கிடைத்த விடைகளை அறிய விரும்பினார்கள். காயிலை தின்றும் தீயிடை நின்றும் கதிதேடிக் கொடுந் தவம் கிடந்த முனிவனை நோக்கி, நாரதர் நீ இன்னும் மூன்று பிறப் பெடுத்த பின் உன் முத்தியைக் குறித்து யோசித்தல் கூடும் என்பது இறைவன்—திருவுளம் என்று மொழிந்தார். தவசி பெருமூச்செறிந்து ஏக்கங் கொண்டு 'ஐயோ' இன்னும் மூன்று பிறப்பு என்று அலறினான். ஓர் ஆலமர நிழலில் ஆடிப்பாடிக் கொண்டிருந்த பக்தனை நோக்கி, நாரதர், "இம் மகாவிருட்சத்தில் எத்தனை இலைகளுண்டோ, அத்தனை இலைகளும் நீமுத்தி பெறுவதற்கு முன் எடுக்கவேண்டிய பிறவியின் தொகையாகும்" என்று சொன்னார். பக்தனோ, பரமசந்தோஷங் கொண்டு முன்னிலும் அதிகமாகக் களிநடம் புரிந்தான். உடனே நாரதர் பக்திமணியை நோக்கி நகையாடி அன்ப! உனக்கு இன்றே விடுதலை; இப்போதே விடுதலை! என்று அருளினார். அப்பால் அவர் தவசியை நோக்கிச் சோகந் தோய்ந்த குரலில், "தவசியே! துன்பத்தால் இழைக்கப்பெற்ற உனது மனநிலை, விடுதலைக்கும்முற்று முரணாக நிற்பதால் மூன்று பிறவிக்குப் பின்னரும் அது தாயிற் சிறந்த தயாநிதியான சிவபிரானது சிந்தனை

க்கு உரியதேயாகும் அந்தோ! உன் விடுதலைப் பேறு நிச்சயமான தன்று'' என்று பேசினர்.

உழைப்பினிடையே ஆடிப்பாடும் மனநிலைதான் முத்தர்நிலை "வம்மின் புலவீர்! நும் மெய்வருத்திக்கை செய்து உய்மினே''! என்று நம்மாழ்வார் பக்தர்களை நோக்கிக் கூறுகிறார். உடம்பு உழைப்பிற்கும் உள்ளம் இன்ப மயமான பக்திக்கும் உரிமையாக்கப் பெறுதல் வேண்டும் என்பது ஆழ்வார்—குறிப்பு. உடம்பை வெயிலிலும் உள்ளத்தை அருள்—நிழலிலும் வைப்பவர் பக்தர். சாமானியரோ உடலினைச் சுகபோக-நிழலிலே வைத்து இதயத்தைக் கோடை வெயிலில் வறண்டயரும் பாலைவன மாக்குவர்.

பக்தருக்கு எங்கும் இன்பம்; எல்லாம் இன்பம்! மோனமும் இன்பம்; ஞானமும் இன்பம்! பேச்சும் இன்பம்; மூச்சும் இன்பம். உழைப்பும் இன்பம்; விடுதலையும் இன்பம். எத்தொழிலைச் செய்தாலும் எத்தகைய அவஸ்தையை அடைந்தாலும், "பத்திபண்ணிக்கொண்டிருந்தால் முத்திபெறலாமே!''—என்பதுபத்தரது மனநிலை.

இத்தகைய மனநிலை அற்புத ஆற்றல் வாய்ந்தது; அற்புத அழகு வாய்ந்தது. பக்தனது வாழ்க்கை, இவ் இருள்தருமா ஞாலத்திடையே ஓர் ஜோதிவெள்ளமாக இருள்கிழிய நீண்டு நிமிர்கின்றது.

சம்பந்தர் வெற்றி.

துகளன் எழுதியது.

(112-வது பக்கத் தொடர்ச்சி.)

அது கேட்ட அரசனை நோக்கி "இது ஆகாது" என்று பிள்ளையார் விளக்கி யருளினர்; ஆயினும் அமணர் தங்கள் சபதப் படி கழுவேறி மாய்ந்தனர்.

கொன்று பிள்ளையூர் புக்கார்
குண்டர் நகரக்குழி புக்கார்

என்று அகில கலா வல்லி சொல்லி இறைஞ்சியிருக்கவே இவ்வினிய. கதையை கேட்டருளினர் தேவியார்.

தெம் முன் சென்று நம்பிள்ளை
செய்த தொரு போர் செப்பினையால்
நம் முன் தவள முளரி மிசை
யிருக்கப் பெறுதி; நாமகளே.

என்று நாமகளுக்கு தம்முன் வீற்றிருக்கும் பெருமை அளித்தனர்

என்று இவ்வாறு பிள்ளையார் மதுராபுரியிலே நிகழ்த்திய வாதப்போர் தக்கயாகப் பரணியிலே வருணிக்கப்பட்டுள்ளது.

(சு—நி.)

கதர் ஆடைச் சிறப்பு.

திருவாளர். பூதூர் வைத்தினாதய்யரவர்கள்.

பராபரக்கண்ணி.

காந்தியுரை தனைமதித்து கதரணியா யிந்தியர்க்கு
சாந்தியிலை யென்பதனைச் சாற்றாய் பராபரமே.

இன்னாட்டுப் பஞ்சுதனை இராட்டையிலே நூலாக்கி
என்னாளும் துகில்செய்ய இசைப்பாய் பராபரமே.

பரதேச ஆடையினால் பஞ்சமுறும் நம்நாடு
நிறைவாகுங் கதரதனால் நினைப்பாய் பராபரமே.

இந்தியர்கள் ஆடையினை எவ்வுலகும் போற்றிசெய்தார்
பிந்தியவர் விட்டதனால் பெருமையிலை பராபரமே.

சீஆர் தாசுமுதல் சீமானும் நேருவின்றன்
தாயார் முதல்கதரை தானணிந்தார் பராபரமே.

மன்னாதி மன்னர்களும் மாசிறப்புப் பெற்றாரும்
இன்னாட்டுக் கதரணிந்தால் எற்கும் பராபரமே.

நித்தியமும் ராட்டைச்சுற்றும் நேயர்கள்பால் திருமாது
நித்தியமாய் வாழுமென்ப நினைப்பீர் பராபரமே.

நெம்பர்மல் கிளாஸ்கோமல் நிற்காது பலநாட்கு
நம்புங் கதருழைக்கும் நாலாண்டு பராபரமே.

உடுத்தா லழகுதரும் உத்தமநல் வெண்மைதரும்
தடுத்தாற் கெடுதிதரும் தனிக்கதர்தான் பராபரமே.

காவிகொளும் மடபதிகள் கதராடை யுடுத்திவந்தால்
பூவிற் பரவியொரு பொருளாம் பராபரமே.

உலகமெலாம் போற்றுமொரு உத்தமனார் காட்டிதந்த
நலமளிக்குங் கதர்தன்னை—நாடுடுப்ப தெக்காலம்.

பஞ்சுதனை நாம்விளைத்துப் பரதேசம் அனுப்பிப்பின்
அஞ்சுநூறு தந்துபெறும்—அசடொழிவ தெக்காலம்.

ஒப்பாரு மில்லாத ஓர்பெரிய காந்திமகான்
தப்பாது சொன்னகதர்—தனையணிவ தெக்காலம்.

நற்பதவி இந்தியர்க்கு நாட்டநினைந் தோரெல்லாம்
அற்புதமாங் கதரணிந்து—அறஞ்செய்வ தெக்காலம்.

(ஆ-வி.)

கடவுள் வணக்கம்.

தானன தந்தன தந்தனந் தந்தன
தானன தந்தன தந்தனந் தந்தன
தானன தந்தன தந்தனந் தந்தன தனதான.

17. காதட ருங்கயல் கொண்டிசைந் தைம்பொறி
வாளிம யங்கம னம்பயந் தந்திருள்
கால்தர இந்துவி சும்பிலங் கும்பொழு தொருகோடி

காய்கதி ரென்றொளிர் செஞ்சிலம் புங்கணை
யாழியு டன்கட கந்துலங் கும்படி
காமனெ டுஞ்சிலை கொண்டடர்ந் தம்பொரு மயலாலே

வாதுபு ரிந்தவர் செங்கைதந் திங்கித
மாகந டந்தவர் பின்திரிந் துந்தன
மார்பில ழுந்தவ ணைந்திடுந் துன்பம துழலாதே

வாசமி குந்தக டம்பமென் கிண்கிணி
மாலைக ரங்கொளு மன்பர்வந் தன்பொடு
வாழநி தம்புனை யும்பதந் தந்துன தருள்தாராய்

போதினு றைந்தருள் கின்றவன் செஞ்சிர
மீதுத டிந்துவி லங்கிடும் புங்கவ
போதவ ளஞ்சிவ சங்கரன் கொண்டிட மொழிவோனே

பூகமு டன்திகழ் சங்கினங் கொண்டகி
ரீவம டைந்தபு ரந்தரன் தந்தருள்
பூவைக ருங்குற மின்கலந் தங்குப னிருதோளா

தீதக மொன்றினர் வஞ்சகந் துஞ்சியி
டாதவர் சங்கரர் தந்தவன் பும்பல
சேர்நிரு தன்குல மஞ்சமுன் சென்றடு திறலோனே

சீதள முந்தும ணந்தயங் கும்பொழில்
சூழ்தர விஞ்சைகள் வந்திறைஞ் சும்பதி
தேவர்ப ணிந்தெழு தென்பரங் குன்றுறை பெருமாளே.

தந்த தானன தனதன தனதன
தந்த தானன தனதன தனதன
தந்த தானன தனதன தனதன தனதான.

20. பஞ்ச பாதக முறுபிறை எயிறெரி
குஞ்சி கூர்விட மதர்விழி பிலவக
பங்க வாண்முக முடுகிய நெடுகிய திரிசூலம்

பந்த பாசமு மருவிய கரதல
மிஞ்சி நீடிய கருமுகி லுருவொடு
பண்பி லாதொரு பகடது முதுகினில் யமராஜன்

அஞ்ச வேவரு மவசர மதிலொரு
தஞ்ச மாமென வழிவழி அருள்பெறும்
அன்பி னூனை தடிபுக ழடிமையென் எதிரேநீ

அண்ட கோளகை வெடிபட இடிபட
எண்டி சாமுக மடமட நடமிடும்
அந்த மோகர மயிலினி லியலுடன் வரவேணும்

மஞ்சு போல்வள ரளகமு மிளகிய
ரஞ்சி தாம்ருத வசனமு நிலவென
வந்த தாயவெண் முறுவலு மிருகுழை யளவோடும்

மன்றல் வாரிச நயனமு மழகிய
குன்ற வாணர்த மடமகள் தடமுலை
மந்த ராசல மிசைதுயி லழகிய மணவாளா

செஞ்சொல் மாதிசை வடதிசை குடதிசை
விஞ்சு கீழ்திசை சகலமு மிகல்செய்து
திங்கள் வேணியர் பலதளி தொழுதுயர் மகமேரு

செண்டு மோதின ரரசரு ளதிபதி
தொண்ட ராதியும் வழிவழி நெறிபெற
செந்தில் மாநக ரினிதுறை அமரர்கள் பெருமாளே.

ஸ்தல மஞ்சரி.

ஸ்ரீமதி. பண்டிதை அசலாம்பிகை அம்மாளவர்கள்.

(114-வது பக்கத் தொடர்ச்சி.)

சோளங்கி புரம்.

காதரும் புலமோ ரைந்தையும் வென்று
காற்றையு மிகையென வெறுத்த
மாதவ ரெழுவர்க் கருள்செய வேண்டி
மன்னுமோர் கடிகையி னடைந்தோர்க்
காதரம் பெருக முத்திவீ டளிக்கு
மருண்மலைச் சிகரம்வீற் றிருக்கும்
சீதர னிணையான் றிருவுறக் கண்டே
சிறந்தனன் செய்தநற் றவத்தால். 36

திருப்பா திரிப்புலியூர்.

கல்லே பிணையாக் கடல்கடந்து வாகீசர்
சொல்லாற் கரையேறச் சூழ்ந்தருள்செய்-செல்லாரும்
பாதிரியூர் வைப்பைப் பரவினோர் வாழ்வாரே
மாதிரமுந் தாழமகிழ்ந்து. 37

நந்தாவளஞ்சேரு நற்பாட லீசனெனு
மெந்தாயிரத மினியூர்வாய்-முந்தோர்நாள்
பூத்தேர் நடாத்திப் புரமெரித்த புண்ணியனே
காத்தாள்கை யுன்றன் கடன். 38

பேதையேன் பாவிற் பிழைகாணுங் காதலினோ
மேதையோர் பாவுயர்த்தும் வேட்கையோ-பாதிரியூர்ச்
செவ்வண்ணக் குன்றேநின் செல்வமணித் தேர்செல்லா
திவ்வண்ணந் தாழ்க்கு மிது. 39

திரையேற்ற கருங்கடலிற் றிருவருளா லப்பர்தமைக்
கரையேற்று நாயகநீ கருத்தேற்றத் தகுதியிலாட்

புரையேற்ற வெந்தனையும் புகலேற்றிப் புந்திமயற்
கரையேற்றிக் கதியேற்றிக் காட்டினை நின்னருட்கோலம். 40

திருமாணி குழி.

மெய்யடியார் போல்நடித்தம் மேலவருக் கன்புசெயாப்
பொய்யடிமை தானும் பொறுத்தருளும்-செய்யநெறி
கோணிக் குழிநரகங் கொள்விழலர் காண்பரிய
மாணிக் குழிவாழ் மணி. 41

வாமனனே வாமனனே வாமனனார் தாழுமுமை
வாமனையே கூடிமிக வாழ்வுறவே-பூமன்
பலியா யுலகாளப் பைஞ்சுடரைத் தூண்டு
மெலிமேவு நல்லருளே யெண்ணி. 42

பெண்ணா லருந்தவரும் பேதுறுவ ராடவனும்
பெண்ணா லுன்போலெவரோ பீடழிந்தார்-எண்ணுமற்
சொல்லுதல் யார்க்கு மெளிய அரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல். 43

திருவதிகை.

சுற்ற மானவர் தொடக்கறச் சூழ்ந்தருள்குவையென்
றற்ற மேலவ ருரைத்தன ரதற்கெதி ராகச்
சுற்ற மானவ ராற்சுகஞ் சூழ்ந்திடவருள்வாய்
கொற்ற வானவ நின்றிறங் கூறுவதெவனோ. 44

தௌவையார்துயர் படவவர் தம்பியார்க் கிரங்கி
செவ்வை கூரருள்வழங்கினை சிறியவென் பொருட்டால்
கௌவை கூர்தம ரிலரெனக் கருதியோ வலிந்தே
எவ்வ நீக்கினைத் தொழுமுன மெனிலியம் புவதென். 45

திங்கள் சூடிய வதிகையிற் சேவகர் தெவிட்டா
எங்கள் நாயகருளப் பிணி யுயிர்ப்பிணி யாவும்
பொங்கு பேரரு ளால்முனம் போக்கிநற் பொலந்தாள்
இங்குவா தொழுகெனப்பணித் தழைத்தன ரிதுவென். 46

(தொடரும்.)